**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 04-11-2022**

திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-11-04 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)

| வானிலை காரணி | 2022-11-05 | 2022-11-06 | 2022-11-07 | 2022-11-08 | 2022-11-09 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 40.0 | 25.0 | 25.0 | 8.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 30.0 | 30.0 | 30.0 | 32.0 | 32.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 23.0 | 23.0 | 23.0 | 24.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85 | 85 | 80 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 60 | 55 | 55 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 10.0 | 10.0 | 10.0 | 10.0 | 10.0 |
| காற்றின் திசை (கோணம்) | 110 | 110 | 110 | 50 | 50 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 4 | 4 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

நவம்பர்- 05-ஆம் தேதி முதல் 08-ஆம் தேதி வரையிலான நாட்களில் மிதமான முதல் கன மழைப்பொழிவு எதிர் பார்க்கலாம்; காற்றின் வேகம் மணிக்கு சுமார் 10.0 கி.மீக்கும் வீசக் கூடும்; காற்றின் திசையானது வடகிழக்கு முதல் கிழக்கு தென்கிழக்கு நோக்கி வீசக்கூடும்; அதிகபட்ச வெப்பநிலை முறையே 30.0°C முதல் 32.0°C-ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 23.0°C முதல் 24.0°C ஆகவும் முறையே எதிர் பார்க்கலாம்; காற்றின் ஈரப்பதம் 55-85% காணப்படலாம்.

## பொது ஆலோசனை:

09.11.2022 முதல் 15.11.2022 வரை தமிழ்நாட்டில் மழை, குறைந்தபட்ச வெப்பநிலை மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பாக இருக்கும்.

## குறுஞ்செய்தி :

1.பயிர் வயலில் நீர் தேங்காதவாறு முறையான வடிகால் வசதியினை மேம்படுத்தவும்; 2.பயிர்களுக்கு பூச்சிக்கொல்லி மற்றும் களைக்கொல்லி தெளிப்பு மற்றும் உரமிடுவதை தவிர்க்கவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | 1.தண்டுத்துளைப்பான்- ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 20% WP 50 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும; 2.இலை சுருட்டுப்புழு- ஏக்கருக்கு அசிபேட் 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 3.இலைக் கருகல் நோய்- ஏக்கருக்கு இரண்டு முறை காப்பர் ஹைட்ராக்ஸிட் 77 WP 500 கிலோ கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்; 4.புகையான்- ஏக்கருக்கு அசாடிராக்டின் 0.03% 400 மில்லி லிட்டர் அல்லது குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5% SC 60 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். வயலில் நன்றாக தண்ணீர் வடிந்த பிறகு மருந்து தெளிக்க வேண்டும், பயிரின் அடிப்பாகம் முழுவதும் நனையும் படி பூச்சிக்கொல்லியினை தெளிக்கவேண்டும். இரவு நேரங்களில் விளக்கு பொறி பகல் நேரங்களில் மஞ்சள் தட்டு பொறி அமைத்து புகையானை கவர்ந்து அழிக்கலாம், தேவைக்கதிகமான தழைச்சத்து உரமிடுதலை தவிர்க்கவும். |
| கரும்பு | 1.இடைக்கணுப் புழு- I). முட்டை ஒட்டுண்ணி டிரைகோகிரம்மா கைலோனிஸ் அட்டையினை ஏக்கருக்கு 1 சி.சி என்ற வீதம் 15 நாட்களுக்கு ஒருமுறை என்றவாறு 4வது மாதத்திலிருந்து வயலில் கட்டி விட வேண்டும். II).150 மற்றும் 210வது நாட்களில் முறையாக சோகை உரித்தல் வேண்டும். இதனால் இலைப்பரப்புகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் கூட்டுப்புழுக்கள் நீக்கப்படும்; III).அதிகப்படியான நைட்ரஜன் உரமிடுதலைத் தவிர்க்கவும். இதனால் இலை தீதலில் இருந்து தவிர்களாம் |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | பழ அழுகல் மற்றும் நுனி கருகல்- காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 கிராம் வீதம் 15 நாட்கள் இடைவெளியில் 3 முறை வீதம் தெளிக்கலாம். |
| கத்திரிக்காய் | சிற்றிலை அல்லது சிறு இலை நோய்- டைமெத்தோயேட் 30 EC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி லிட்டர் என்ற வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். மேலும் நோய் தாக்கப்பட்ட இலையினை அகற்றி விடலாம். |